**செய்தி வெளியீடு எண்: 948** **நாள்:11.12.2020**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 10.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மீன்வளத் துறை சார்பில் பாக் வளைகுடா பகுதி மீனவர்களின் இழுவலைப் படகுகளை ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றும் திட்டத்தின் கீழ், 15 ஆழ்கடல் மீன்பிடி படகுகளை புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட மீனவப் பயனாளிகளின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் விதமாக, புதுச்சேரி சிகாஜன் படகு கட்டும் நிறுவனத்தின் தளத்திலிருந்து 8 ஆழ்கடல் மீன்பிடி படகுகளை காணொலிக் காட்சி மூலமாக கொடியசைத்து துவக்கி வைத்து, 7 மீனவப் பயனாளிகளுக்கு ஆழ்கடல் மீன்பிடி படகுகளுக்கான பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் சாவிகளையும் வழங்கினார்கள்.

பாக் வளைகுடா மீனவர்களின் வாழ்வாதாரத்தினை உறுதி செய்திட மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் பாக் வளைகுடா பகுதியிலுள்ள 2,000 இழுவலைப் படகுகளுக்கு பதிலாக புதிதாக ஆழ்கடல் தூண்டில் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள் வலை படகுகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2017–18ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 500 இழுவலைப் படகுகளை ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றிடும் இத்திட்டத்தை செயல்படுத்திட தமிழ்நாடு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கி, மத்திய அரசு பங்குத் தொகையுடன் 286 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது. ஒரு படகின் விலையான 80 லட்சம் ரூபாயில், 50 சதவிகிதம் மத்திய அரசின் மானிய உதவியுடனும், 20 சதவிகிதம் மாநில அரசு நிதியுதவியுடனும், 10 சதவிகிதம் பயனாளியின் பங்களிப்புடனும், மீதமுள்ள 20 சதவிகிதம் தொகை வங்கி கடனுதவி மூலமாகவும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக படகு கட்டும் நிறுவனம், மீன்வளத்துறை மற்றும் மீனவ பயனாளிகளுக்கிடையே முத்தரப்பு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. அதன்படி 95 இழுவலைப் படகுகளுக்கு பதிலாக புதிதாக ஆழ்கடல் தூண்டில் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள் வலை படகுகளாக மாற்ற பணியாணை வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 24 பயனாளிகளுக்கு ஆழ்கடல் மீன்பிடி படகுகள் கட்டி முடிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 45 படகுகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக, நாகப்பட்டினம், புதுச்சேரி மற்றும் தூத்துக்குடி படகு கட்டும் தளங்களிலிருந்து 12 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட 15 ஆழ்கடல் மீன்பிடி படகுகளை, புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட மீனவப் பயனாளிகளின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் விதமாக, புதுச்சேரி சிகாஜன் படகு கட்டும் நிறுவனத்தின் தளத்திலிருந்து 8 ஆழ்கடல் மீன்பிடி படகுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். மேலும், தலைமைச் செயலகத்தில் 7 மீனவப் பயனாளிகளுக்கு ஆழ்கடல் மீன்பிடி படகுகளுக்கான பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் சாவிகளையும் வழங்கினார்கள்..

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கடந்த மூன்று ஆண்டுகால செயல்பாடுகளின் அடிப்படையில் ''மீன்வளத்துறையில் அரசு சார்ந்த நிறுவனங்களில் சிறந்த செயல்பாடு'' என்ற பிரிவின் கீழ் உரிய கருத்துருவினை மத்திய அரசின் மீன்வளத்துறைக்கு ஐதராபாத்திலுள்ள தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய முகமை மூலம் சமர்ப்பித்ததன் அடிப்படையில், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ''சிறந்த கடல்வள அரசு நிறுவனம் / இணையம் / கழகம் / வாரியம்'' என்ற பிரிவின் கீழ் சிறந்த நிறுவனமாக மத்திய அரசால் தேர்வு செய்யப்பட்டு, உலக மீனவ தினத்தை முன்னிட்டு மத்திய மீன்வள அமைச்சகத்தின் சார்பில் புதுடில்லியில் கடந்த 21.11.2020 அன்று நடைபெற்ற விழாவில், மாண்புமிகு மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தின் இணை அமைச்சர் திரு. பிரதாப் சந்திர சாரங்கி அவர்கள் வழங்கினார். மத்திய அரசால் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு வழங்கப்பட்ட தேசிய விருதினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், தலைமைச் செயலாளர் திரு. க.சண்முகம், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., மீன்வளத்துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஜெ.ஜெயகாந்தன், இ.ஆ.ப., மீன்வளத் துறை கூடுதல் இயக்குநர் திரு. ஜானி டாம் வர்கீஸ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**